1994 மார்ச் 28]

109-

கடவூர் ஒன்றியத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல்

* *9817*—திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை தாலுகா, கடவூர் ஒன்றியத்தில் கவரப்பட்டி கிராமத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணிக்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

விடை—

(அ) ஆம்

(ஆ) இப்பணி நடப்பாண்டில் *(1993-94)* செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு :- ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு (Senate) உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சிப்பேரவைக்கு (Senate) இச்சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிடமிருந்து இரண்டு உறுப்பினர்களைத் தெர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவர்களின் பதவிக் காலம் முடிவடையும்.

[பேரவைத் தலைவர்] [1994 மார்ச் 28

வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 31.1.1994 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 4.4.1994 திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 5.4.1994 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 6.4.1994 புதன்கிழமை காலை 10 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. கவன ஈர்ப்பு

(அ) சங்கராபுரம் தொகுதி மூலக்காடு முதல் சேராப்பட்டு வரை பேருந்து இயங்காமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு) திடீரென்று எழுந்து நிற்கிறீர்களே.

திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன் : 10 ஆயிரம் பேருக்கு மேலே ஸ்ட்ரைக் பண்ணுகிறார்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றியிருக்கிறேன் என்றால் கவன ஈர்ப்புத் தீர்மானம் வரிசையாக எடுக்கப்படும். இன்று இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுப்பது என்றால் இன்றைக்கே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அல்ல. அது முறைப்படி சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டு, அவரிடமிருந்து பதில் பெற்று அஜெண்டாவில் போட்டு வரும், உட்காருங்கள். திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, மூலக்காடு முதல் சேராப்பட்டு வரை செல்லும் பேருந்து ஒரு வருடம், எட்டு மாத காலமாக ஓடாதது குறித்த". அவசரப்